# இந்தியா-ஈரான் வெளியுறவு அலுவலக ஆலோசனைகள் (எஃப்ஓசி) கூட்டம்

நவம்பர் 26, 2023

18வது இந்தியா-ஈரான் வெளியுறவு அலுவலக ஆலோசனைகள் (எஃப்ஓசி) தெஹ்ரானில் 26 நவம்பர் 2023 அன்று நடைபெற்றது. வெளியுறவுச் செயலர் திரு வினய் குவாத்ரா மற்றும் ஈரான் இஸ்லாமியக் குடியரசின் அரசியல் விவகாரங்களுக்கான துணை வெளியுறவு அமைச்சர் டாக்டர் அலி பகேரி கனி ஆகியோர் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினர்.

சபாஹர் துறைமுகம், அரசியல் ஈடுபாடுகள், வர்த்தகம் மற்றும் பொருளாதார விஷயங்கள், கலாச்சார பரிமாற்றங்கள், மக்களிடையேயான உறவுகள், விவசாய ஒத்துழைப்பு மற்றும் திறன் மேம்பாட்டு முயற்சிகள் போன்ற இணைப்புத் திட்டங்கள் உட்பட இருதரப்பு உறவின் முழு வரம்பையும் இரு தரப்பும் மதிப்பாய்வு செய்தனர்.

ஆப்கானிஸ்தான் மற்றும் காஸாவின் முன்னேற்றங்கள் உட்பட தற்போதைய பிராந்திய மற்றும் உலகளாவிய பிரச்சினைகள் குறித்தும் அவர்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர். இந்த ஆண்டு நடைபெற்ற உலகளாவிய தெற்கின் குரல் உச்சிமாநாட்டில் ஈரானின் பங்கேற்பை இந்தியத் தரப்பு பாராட்டியது.

இந்தப் பயணத்தின் போது, வெளியுறவுச் செயலர் ஈரான் வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஹொசைன் அமீர்-அப்துல்லாஹியனுடன் இருதரப்பு சந்திப்பை நடத்தி இருதரப்பு விவகாரங்கள் மற்றும் பிராந்தியத்தில் தற்போதைய சவால்கள் குறித்து விவாதித்தார். ஈரானின் பொருளாதார இராஜதந்திரத்துக்கான துணை வெளியுறவு அமைச்சர் டாக்டர் மெஹ்தி சஃபாரியையும் அவர் சந்தித்து இருதரப்பு வர்த்தகம் மற்றும் பொருளாதார உறவுகளை வலுப்படுத்துவதற்கான வழிகள் குறித்து விவாதித்தார்.

**புது தில்லி**
**நவம்பர் 26, 2023**